# பரிசுத்த வேதாகமத்தில் பெண்கள் நிலை

*பெ. பெனிற்றா மெர்லின் கிரேஸ்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6481

***முன்னுரை***

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்கிறார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பெண்ணின் தியாகப் பண்பைப் பாராட்டும் விதத்தில் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றும், பேசும் மொழியைத் தாய்மொழி என்றும், ஈன்றெடுத்தத் தாய், தந்தையர் என்கின்ற போதும் தாய் என்றே முதலில் கூறியும் பெருமைப்படுத்தியுள்ளனர்.

**“தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொல்காத்துச் சோர்விலான் பெண்”** **(குறள் - 56)**

கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்று இக்குறள் கூறுகிறது.

அன்பு செய்யும் ஒழுக்கத்தை ஆண்மகன் முயன்று பெறுகின்றான். பெண்ணோ இயல்பாகவே பெற்றிருக்கின்றாள். அதனால் தான் அன்பிற்கு உவமையாகத் தாயே பேசப் பெறுகிறாள் என்கிறார் ஔவையார்.

**“தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை”**
**(கொன்றைவேந்தன் - 37)**

“மனத்துக்கண் மாசிலன் ஆதல்” என்பதற்கு ஏற்ப மனதில் தூய்மையுடன் இருத்தல் என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதப் பண்பாக அமைகிறது. மனதளவில் கூட மற்றவருக்குத் தீங்கு நினைக்காமல் வாழ முயல வேண்டும். பெண்கள் தூய உள்ளத்துடன் வாழ்தல் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் என்றுமே இன்பம் விளைவிக்கும்.

***கற்பு***

பெண்ணின் உடலியல் மற்றும் மனையியல் சார்ந்த ஒழுக்கத்தின் விளக்கமாகவே கற்பு என்ற சொல் விளக்கப்பட்டுள்ளது. கற்பு என்பது பண்பாட்டின் குறியீடாகவும், பெண்ணின் ஒழுக்க அடையாளமாகவும் காட்டப்படுகிறது.ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர் பண்பாடு ஆகும்.

“கல்வி, கதி, அறிவு, ஆணை, தியானம், மகளிர் ஒழுக்கம், சங்கற்பம், முல்லைக்கொடி” என்று கற்பிற்கு பொருள் தருகிறது. (மணிமேகலைத் தமிழ் அகராதி ப.187)

**ஒருவனுக்கு ஒருத்தி**

ஒருவனுக்கு ஒருத்தி என்பதை பரிசுத்த வேதாகமம் வலியுறுத்துகிறது. தேவனாகிய கர்த்தர், புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடு இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் (ஆதியாகமம் 2:24) என்று கூறுகின்றார். இந்தக் கட்டளையை மீறுகின்ற எந்தப் பெண்ணும் ஆணும் தண்டனைக்கு ஆளாகின்றதை வேதாகமத்தில் நாம் காண முடிகிறது. வேதாகமத்தில் கற்பு நெறியுடன் வாழ்ந்த பெண்கள் பெற்ற சிறப்பையும், கற்பு நெறி தவறியவர்கள் வாழ்க்கையில் அடைந்த துன்பங்களையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**பரிசுத்த வேதாகமம்**

வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரின் வார்த்தைகள் அடங்கியது பரிசுத்த வேதாகமம் நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்கக் கூடிய தாயுடன் வாழ்வை மாற்றக் கூடியதாகவும் உதவும் அரிய பொக்கிஷமாக திகழ்கிறது. வோதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன. அதில் பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தங்களும் உள்ளன. உலகில் அதிக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டும், நாற்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களால் எழுத்தப்பட்டும், உலகிலேயே மிக அதிகமான மக்களால் வாசிக்கப்படுகிறதுமான ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமம்.

**பரிசுத்த வேதாகமம் பற்றி அறிஞர்கள் கருத்து**

**ரெனால்ட்ரீகன்**

உலகத்தில் நம்மை எதிர்நோக்கி இருக்கிற பிரச்சினைகளுக்குமான பதில் பரிசுத்த வேதாகமத்தின் அட்டைகளுக்கும் நடுவே உண்டு என்கிறார்.

**நெப்போலியன் போனபார்ட்**

பரிசுத்த வேதாகமம் ஒரு புத்தகம் அல்ல. இது ஒரு உயிரோட்டமுள்ள ஒரு படைப்பு. அது தன்னை எதிர்க்கிறவர்களை எல்லாம் வெற்றிக் கொள்ளக்கூடிய ஜீவனுள்ள சிருஷ்டி என்றார்.

**மகாத்மா காந்தியடிகள்**

எத்திசையில் செல்வது என்று முடிவு எடுக்க முடியாத சந்தர்ப்பங்கள் உண்டான போதெல்லாம் பரிசுத்த வேதாகமத்தை நோக்கியே தான் திரும்பி இருக்கிறேன். புதிய ஏற்பாடு கூறும் வார்த்தையிலிருந்து என்னுடைய சூழ்நிலைக்குத் தேவையான பெலனை நான் பெற்றுக் கொண்டேன்.

கற்பு நெறி தவறியவர்கள்

**தாமார் அம்னோன்**

தாவீதின் குமாரன் அம்னோன், அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின் மேல் மோகங் கொண்டான். தாமார் சவுந்தரியமுள்ளவள் கன்னியாஸ்திரீயாக இருந்தாள். அம்னோன் தாமாரைக் கற்பழித்து மதிகேடான காரியத்தைச் செய்தான். ராஜகுமாரத்தியாகிய தாமார் பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தலைமேல் வைத்து சத்தமிட்டு அழுதுகொண்டு போனாள். தாமார் தன்னுடைய சகோதரனாகிய அப்சலோமின் வீட்டில் தனிமையாகக் கிலேசப்பட்டுக் கொண்டிருந்தாள். அம்னோனை அப்சலோம் அடித்துக் கொன்றான். தாமாருக்கு துன்பம் விளைவித்த அம்னோன் கொலை செய்யப்பட்டான்.(2 சாமுவேல் 13:1-39)

**தீனாள் - சீகேம்**

யாக்கோபு லேயாளின் குமாரத்தி தீனாள். தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள். ஏமோரின் குமாரனும், சீகேம் தேசத்து பிரபுவாகிய சீகேம் என்பவன் தீனாளைக் கண்டு, அவளைத் தீட்டப்படுத்தினான். அவனுடைய மனம் அவள் மேல் பற்றுதலாய் இருந்தது. அவளை நேசித்து, அவளின் மனத்துக்கு

இன்பமாய் பேசினான். மதிகெட்ட காரியத்தை செய்த சீகேம் என்பவன் யாக்கோபு, அவனுடைய குமாரரோடு பேசி, நீங்கள் என்னிடத்தில் எதைக் கேட்டாலும் தருகிறேன். அந்தப் பெண்ணை மாத்திரம் எனக்கு மனைவியாக கொடுங்கள் என்று கூறினான். பெண்ணுக்கு தவறு செய்து விட்டபின்பு அவளைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறுகின்றான்.

சீகேம் என்பவன் தன் தகப்பன் வீட்டார் அனைவருக்குள்ளும் மேன்மையுள்ளவனாக இருந்தான். விருத்தசேதனம் பண்ணி நோவு எடுத்துக் கொண்ட மூன்றாம் நாளில் தீனாளின் சகோதரனான சிமியோன், லேவி இருவரும் பட்டயத்தை எடுத்துக் கொண்டு ஆண்மக்கள் அனைவரையும் கொன்று போட்டார்கள். தீனாளைத் தீட்டுப்படுத்தின சீகேம் பிரபுவாக இருந்தாலும் கொலை செய்யப்பட்டான். (ஆதியாகமம் 34:1-31)

### ராகாப்

ராகாப் என்னும் வேசி எரிகோ பட்டணத்தில் வாழ்ந்து வந்தாள். வேசியாக இருந்தாலும், கர்த்தரையும் அவர் செய்த அற்புதமான செயல்களையும், கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் என்று அறிக்கை செய்து கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உதவி செய்ததால் எரிகோ பட்டணம் அழிக்கப்படும் போது அதனால் அவளும் அவளுடைய குடும்பமும் காப்பற்றப்பட்டார்கள். தவறு செய்தவர்கள் தவறினை உணர்ந்து மனம் மாறும்போது இறைவன் அவர்களுக்கு இரங்கி உதவி செய்கிறார். (யோசு வா2: 1-24)

### தாமார் - யூதா

யூதா, சூவா என்பவனுடைய குமாரத்தியை திருமணம் செய்தான். மூத்த குமாரன் ஏர் என்பவனுக்கு தாமார் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தான். ஏர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருந்ததினால் கர்த்தர் அவனை அழித்துப் போட்டார். இரண்டாவது மகன் ஓனான் என்பவனிடம் தாமாரை சேர்த்துக் கொள்ளக் கூறினான். அவனும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப் பானதைச் செய்தான். அவனையும் கர்த்தர் அழித்தார். மூன்றாவது மகன் சேலாவும் இவர்களைப்போல இறந்து போவான் என்று அஞ்சி, சேலா பெரியவனாகுமட்டும், நீ உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்ணாய்த் தங்கியிரு என்று கூறினான். தாமார் தன் தகப்பன் வீட்டிலே தங்கி இருந்தாள். சேலா பெரியவனான போதும் தான் அவனுக்கு மனைவியாகக் கொடுக்கப்படவில்லை என்பதை தாமார் கண்டு நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்தாள். அவள் வேசி என்று நினைத்து யுதா அவளைச் சேர்ந்தான். தாமார் வேசித்தனம் பண்ணுவதற்கு யுதா காரணமாக இருந்தான். (ஆதியாகமம் 38:6-30)

### தெலீலாள் - சிம்சோன்

சிம்சோன் தெலீலாள் என்ற ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். தவறான இடத்திற்கு தவறான பெண்ணைத் தேடிச் சென்றதால், கர்த்தர் அவனுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை இழந்து, கண்கள் பிடுங்கப்பட்டவனாய் மரித்துப் போனான். (நியாயாதிபதிகள் 16:4-21)

### ஏரோதியாள் - ஏரோது

யோவான் நீதியும், பரிசுத்தமும் உள்ளவன் ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிகக் கொண்டதை யோவான் நியாயமல்ல என்று கூறினார். அதினிமித்தம் ஏரோது யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான். ஏரோதின் பிறந்த நாளன்று ஏரோதியாள் தன் மகளிடம் யோவான் ஸ்நானனுடைய தலையைக் கேட்கும்படி கூறினாள். ஏரோது ஆணையினிமித்தம் அதை அவளுக்குக் கொடுத்தான். தவறான உறவு நீதியுள்ள பரிசுத்தமான யோவனைக் கொலை செய்ய வைத்து ஏரோமியாளின் நெறி தவறிய வாழ்க்கை பிறரது வாழ்க்கை அழிந்து போகக் காரணமாக அமைந்தது. (மாற்கு 17-30)

### சமாரிய ஸ்திரீ

யூதர்கள் சமாரியர்களோடு சம்பந்தம் கலக்கமாட்டார்கள். இயேசு தாகத்துக்குத்தா என்று சமாரிய ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தபோது கேட்கிறார். அவள் நான் சமாரியன் நீர் யூதர் என்று சுட்டிக்காட்டுகின்றாள். இயேசு அவளிடம் தான் ஜீவத்தண்ணீரை அருளுபவர் என்று கூறியதுடன், அவளது தவறான வாழ்க்கையைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றார்.

நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று அந்த ஸ்திரீ சொன்ன சாட்சியினிமித்தம் சாமாரியா நாட்டிலுள்ள சமாரியரில் அநேகர் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். (யோவான் 4:4-42)

### விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீ

வேதபாரகளும் பரிசேயரும் விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை இயேசு விடத்தில் கொண்டு வந்து நிறுத்தி, இவளை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிடுகிறார். நீர், என்ன சொல்லுகிறீர் என்றார்கள். இயேசு குனிந்து விரலினால் தரையில் எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிந்து பார்த்து உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கட்வன் என்று கூறினார். அவர்கள் அதைக் கேட்டு தங்கள் மனச் சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் போய் விட்டார்கள். இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை. நீ போ இனி பாவஞ் செய்யாதே என்றார். விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை எச்சரித்து அனுப்பி விடுகின்றார். இதன் மூலம் பாவத்தை அறிக்கையிட்டால் மீட்பு உண்டு என்பது புலனாகிறது. (யோவான் 8:3-11)

### கற்பு நெறி தவறாதவர்கள்

#### எலிசபெத்து (லூக்கா 1:5-63)

பெண்கள் குழந்தை பெற இயலாத நிலையில் மலடி என்று சமுதாயத்தில் இழிவுபடுத்தப்படுகின்றனர். ஆனால் மலடி என்னப்பட்ட வயது சென்ற எலிசபெத்துக்கு குழந்தை செல்வம் அருளி எலிசபெத்து, சகரியாவை கர்த்தர் ஆசீர்வதித்து உயர்த்தினார். முதிர் வயதில் எலிசபெத்து ஒரு குமாரனைப் பெற்று யோவான் என்று பெயரிட்டாள்.

### மரியாள்

ஓர் ஆணும் பெண்ணும் இல்லறவாழ்வில் இணையும் பொழுது அவர்களுக்குக் குழந்தைகளை இறைவன் அருளுகின்றார். ஆனால், இங்கு மரியாள் என்கிற ஒரு கன்னிகை யோசேப்பு என்கிற புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த காலத்தில் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள். முதற்பேறான குமாரனைப் பெற்று அவருக்கு இயேசு என்று பேரிட்டாள். இயேசு மனுக் குலத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பதற்காக கன்னிகையின் வயிற்றில் மனிதனாகச் அவதரித்துப் பிறந்தார். (மத்தேயு 1:18-25)

### விதவை

ஒரு பட்டணத்தில் ஒரு நியாதிபதி இருந்தான். அவன் அநீதியுள்ளவன், தேவனுக்குப் பயப்படாதவன், மனுஷரை மதிக்காதவன். அப்படியிருந்தும் ஒரு விதவை அவனிடத்தில் சென்று தன்னுடைய எதிராளிக்கும் தனக்கும் இருக்கின்ற காரியத்தில் நியாயம் செய்யும்படி கெஞ்சுகின்றான். அநீதியுள்ள நியாதிபதியின் மனதில் அவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகின்றாள். பெண்கள் எதையும் சாதிக்க வல்லவர்கள். எவரையும் நல்ல உள்ளம் கொண்டவராக மாற்றக் கூடியவர்கள். (லூக்கா 18:1-8)

### ரெபேக்காள் - ஈசாக்கு

மகாரூபவதி, புருஷனை அறியாத கன்னிகை என்று வேதம் ரெபெக்காளைக் குறிப்பிடுகிறது. அன்பு உள்ளம் கொண்டவளாகவும், கருணை உள்ளவளாகவும், மனிதர்களிம் மட்டுமன்றி பிற உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டுகின்ற பெண்ணாகத் திகழ்கின்றாள். ரெபெக்காள்,

ஈசாக்குக்குக் கர்த்தர் இரட்டை பிள்ளைகளைக் கொடுத்து கற்பு நெறியில் வாழ்ந்தவளை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 25:16)

## நகோமி

எலிமலேக்கு, மரித்துப் போனான். நகோமி தன்னுடைய 2 ஆண் பிள்ளைகளுடன் மோவாப் தேசத்திற்கு செல்கிறாள். அங்குள்ள மோவாப் பெண்களான ரூத், ஓர்பாள் என்ற பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கின்றாள். மகன்கள் இரண்டு பேரும் மரித்துப் போகின்றார்கள். கணவனையும் இரண்டு குமாரரையும் இழந்த நகோமி சொல்கிறாள். என்னை மாராள் என்று கூறுங்கள். சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார் என்று கூறுகிறாள்.

ஓர்பாள் முத்தம் செய்து நகோமியை விட்டுச் சென்றாள். ரூத்தோ நகோமியிடம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் என்று கூறி மாமியோடு பெத்லகேமிற்கு வந்தாள். நகோமி கணவனை இழந்தும் கற்பு நெறியினின்று விலகிச் செல்லாமல் வாழ்ந்தாள்.(ரூத் 1 அதிகாரம்)

## ரூத்-போவாஸ்

ரூத் மோவாபியப் பெண்ணாக இருந்தாலும், நற்குணசாலியாக தன் மாமி நகோமியின் சொல் கேட்டு நடந்தாள். ரூத்திற்கு யோவாசை திருமணம் செய்து கொடுத்தார்கள். ரூத்தின் மகனை நகோமி வளர்த்தாள். மகளே நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக. நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், முந்தின நற்குணத்தைக் பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. நீ குணசாலி என்பதை என் ஜனங்களாகிய இந்த ஊரெல்லாம் அறிவார்கள் என்று போவாஸ் ரூத்திடம் கூறுகிறான். ரூத் கணவனை இழந்தவள். ஆனால் போவாஸ் அவளைத் திருமணம் செய்வதற்கு அவளது நற்குணம் காரணமாக இருந்தது.

குணசாலியான ஸ்தீரியைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (நீதிமொழிகள் 31:10) என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளதற்கு ஏற்றாற் போல ரூத் வாழ்ந்தாள்.(ரூத் 3, 4 அதிகாரம்)

## முடிவுரை

நாணயத்திற்கு இரண்டு பக்கங்களைப் போல் ஆணும் பெண்ணும் மானுடத்தில் இரண்டு பக்கங்கள் இரண்டும் பேரும் சேர்ந்தால் சமுதாயம் வளர்ச்சியை நோக்கி நகர முடியும் இங்கு சமுதாய வளர்ச்சி என்பது இனப் பெருக்கம் மட்டுமன்றி நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழுங்க்கங்கள். ஒழுக்கம், நன்னடத்தை ஆகியவற்றையும் குறிக்கின்றன.

கற்பு நெறியினை பின்பற்றி தங்கள் வாழ்க்கையை நடத்திச் சென்றவர்கள் வாழ்வில் பல்வேறு நன்மைகளை பெற்றுள்ளனர். இவர்கள் நாம் சமுதாயத்தில் வாழ்வதற்கான வழிமுறைகளைக் கற்றுத்தருபவராக உள்ளனர். கற்பு நெறி தவறி மனம் விரும்பினதைச் செய்தவர்கள், தங்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்களுக்கும் துன்பத்தை விளைவித்ததோடு மட்டுமன்றி, தேவனுக்குப் பிரியமில்லாத நடத்தை உள்ளவர்களாக மாறினார்கள். இவர்கள் நமக்கு எச்சரிப்பினை அளிப்பவர்களாக காணப்படுகின்றனர். கற்பு நெறி தவறினவர்களில் சிலர் தாங்கள் செய்த தவறினை உணர்ந்து இயேசுவிடம் வந்த போது, அவர் அவர்களது தீமையான செயல்பாடுகளினின்று அவர்களை விடுவித்துக் காப்பாற்றினார்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதிமொழிகள் 28:13) என்ற வார்த்தையின்படி நாம் பாவங்களை விட்டு தேவனுடைய இரக்கத்தையும் மன்னிப்பையும், மீட்பையும் பெறுவோம். வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வோம்.

## துணை நூற்பட்டியல்

1. பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர் 2015.